
தமிழ் DIGITEL காமிக்ஸ்
009
NOT FOR SALE
சேவியர் டோரிஸன் - கிறிஸ்டோப் பெக்
ஆழ்கடலுக்குள் ஒரு
கருவறை!
பாகம்-2

# கதை பற்றிய ஒரு முன்னோட்டம்!

## ஆழ்கடலில் ஒரு கருவறை!



பாகம்-2

History சேனலில் மர்மங்கள் 10 என ஒரு தொகுப்பை முன்பு பார்த்தேன். அதில் சிரியாவின் கடற்கரை கண்காணிப்பு பிரிவில் சில வருடங்கள் முன் நீர்மூழ்கிக் கப்பல் கடல் ஆழத்தில் பயணிக்கும் போது எழும் ஒரு வகையான டிக்க்க்...டிக்க்க் என்கிற ஓசை ரேடியோ அலைவரிசையில் பதிவாகியுள்ளதையும் அந்த பகுதியில் ரஷ்யநீர்மூழ்கிக் கப்பல் நடமாட்டம் உள்ளதாக பரபரப்பாக அறிக்கை வெளியிட்டனர்.




இந்த அறிக்கைக்கு எதிராக, அந்த பகுதியில் திட்டவட்டமாக எந்த கப்பலும் செல்லவில்லை என ரஷ்ய மறுத்தது, மேலும் அந்த வகை ஒலி இரண்டாம் உலகப்போரின் போது பயன்படுத்தப்பட்ட நீர்மூழ்கிக் கப்பல்களில் இருந்து வரும் ஒலி வகையை சேர்ந்தது...அந்த வகை கப்பலானது ஒன்று கூட இப்போது பயன்பாட்டில் இல்லை என ஆதாரத்துடன் முன்வைத்தது.

வல்லுனர்கள் ஆராய்ந்ததில் இருவரின் வாதத்திலும் உண்மை இருக்கிறது என்றனர். அதாவது பதிவு நிஜம்! அந்த வகை ஒலி எழுப்பும் கப்பல் இப்போது இல்லை என்பதும் நிஜம்! பின் அந்த சத்தம் எப்படி பதிவானது ஒரு குழு ஆராய்ச்சியில் ஈடுபட்டு மர்மத்தை ஆராய்ந்து புதிரை விடுவித்தது.





அப்படி ஒரு சத்தம் வந்தது உண்மை. அது உலகப்போரின் போது பயன்படுத்தப்பட்ட நீர்மூழ்கிக் கப்பல்களின் இருந்து வருபவை என்பதும் உண்மை.அது தற்போது பயன்பாட்டில் இல்லை என்பதும் உண்மை! அப்படியானால் அந்த சத்தத்தை எழுப்பியது யார்?எது? இந்த கேள்விக்கு பதில் தான் சுவாரஷ்யமே..!!

அதை எழுப்பியது திமிங்கிலங்கள்! ஆமாம் திமிங்கிலங்களே தான்! உலகப்போரின் போது நீர்மூழ்கிக் கப்பல்களின் உக்கிரமான தாக்குதல்களால் மொத்த திமிங்கில கூட்டமும் ஒருவகை அச்சத்திற்கு ஆளானது.



அந்த அச்சத்தை தந்த ஒலி அதன் மூளையில் ஆழமாக பதிவாகியிருந்தன. கடலின் மேல் பரப்பிலோ,அல்லது அடியிலோ பெரிய சரக்குக்கப்பல் அல்லது எண்ணெய் கப்பல்கள் அந்த வழியாக கடக்கும் போது கடலில் ஆங்காங்கே பரவிக்கிடக்கும் திமிங்கிலங்கள் ஒன்றை ஒன்று உஷார்படுத்திக்கொள்ள அல்லது அதன் அச்சத்தை வெளிப்படுத்த அதே வகை ஒலியை உண்டாக்குவதே காரணம் என ஆய்வாளர்கள் கண்டுபிடித்தனர்.

ஒரு மெல்லிய அல்ட்ராசவுண்ட் கடல் உயிரினங்களையும் மனிதர்களையும் பதைபதைக்க வைத்த நிஜ நிகழ்வை அடுத்து அன்றாடம் நாம் கேட்கும் ஒரு ஒலி எப்படி ஒரு எலிபொறியாக ஒரு உயிரினம் பயன்படுத்துகிறது என்கிற கற்பனை கதையை பார்போம்.





அது ஒரு 2008 ல் வந்த ஒரு ஹாலிவுட் படம்.
அதன் பெயர் The Ruins.




கோடை விடுமுறையில் மெக்ஸிகோ கடற்கரையை ஒட்டியுள்ள காட்டுபகுதிக்கு ஆறு இளைஞர்கள் டிரக்கிங் போகிறார்கள். அந்த காட்டின் அடர்ந்தபகுதியில் மயான்கள் காலத்து ஒரு குட்டி பிரமிடு ஒன்றை பார்க்கிறார்கள். அந்த பிரமிடு முழுவதும் (படிக்கட்டுகளை தவிர) கொடிபோல பரவும் செடிகளால் போர்த்தப்படிருக்க...மேலே என்னதான் உள்ளது என பார்க்க அந்த படிகளில் கால்வைத்த அடுத்தகனம் அந்த பகுதி மலைவாசிகள் அந்த வாலிபர்களை துப்பாக்கி, வில் அம்புகளால் தாக்க சூழ்ந்துகொள்கிறார்கள். அந்த இளைஞர்களும் வேறு வழியில்லாமல் அந்த பிரமிட்டில் உச்சியை அடைகிறார்கள்.

அந்த பிரமிடின் மையத்தில் சேந்து கயிறுடன் கிணறு ஒன்றை தவிர வேறு ஒன்றுமில்லை. கீழே இறங்கிவந்தால் கொல்ல காத்திருக்கும் மலைவாசிகள். ஏனோ அவர்கள் பிரமிடை சுற்றியிருக்கும் மணல்பகுதியை தாண்டி வராமல் ஒரு குறிப்பிட்ட எல்லையில் கொலைவெறியுடன் காத்திருக்க... நேரம் கரைகிறது.







பயம்,தாகம்,பசி,வெயில் என அந்த இளைஞர்களை அடுத்து என்னதான் செய்வது என முடிவெடுக்க முடியாமல் தடுமாற வைக்கிறது. அப்போது திடீரென ஒரு செல்போன் சினுங்கும் சத்தம் வருகிறது. அந்த சத்தம் எங்கேகிருந்து வருகிறது என காதுகளை அத்தனை பேரும் தீட்ட... அது கிணற்றின் உள் பகுதியில் இருந்து வருவதை அறிகிறார்கள்.

'செல்போன் கிடைத்தால் உதவிக்கு யாரையாவது அழைக்கலாமே...' கிணற்றில் இறக்கி எடுக்க ஒருவன் இறங்க...பாதி தூரத்தில் சடாரென்று கயிறு அறுந்து 'தொப்' என விழுந்து கால் எலும்பு முறிகிறது!

அடுத்து ஒருவன் உள்ளே கிணற்றில் இறங்கி செல்போன் சத்தம் கேட்டு அதை தேட நிலத்தடி குகைக்குள் போனவன் போனவன்தான்.

கடைசியாக துணிந்து இரண்டு பெண்கள் உள்ளே போனவனையும் செல்போனையும் தேட கிணற்றில் இறங்குகிறார்கள், அந்த இருண்ட கிணற்று குகையில் மெலிதாக கினிங்...கினிங்..என செல்போன் சினுங்குவது கேட்க...அந்த திசையை நோக்கி தீபந்தத்துடன் சென்று பார்க்க அங்கு வளர்த்து கிடக்கும் கொடிகளுக்கு இடையில் சத்தம் தெளிவாக கேட்கிறது.

ஆனால் அவர்கள் அங்கு பார்ப்பது உடைந்து நொறுங்கிய செல்போனை மட்டுமே, இருந்தும்கூட அந்த செல்போன்

சினுங்கல் சத்தம் மட்டும் திரும்ப செடிகளுக்கு இடையில் இருந்து வர...மெல்ல தலையை தூக்கி செடிக்கு அருகில் சென்று பார்க்க... அந்த சத்தம் செடிகளில் பூத்துள்ள ஒரு சிகப்பு ரோஜா போன்ற பூக்களின் இதழ்,சூழ் அசைவில் இருந்து வருவதை பார்க்கிறார்கள். அப்போதுதான் அவர்களுக்கு புரிகிறது ஒரு செடி கூட்டம் தங்களை பொறி வைத்து பிடித்துள்ள விஷயம்..! அது ஒரு ரத்தம் குடிக்கும்... உயிரும் உணர்வும் உள்ள சபிக்கப்பட்ட செடி என்று!



அடுத்து நடக்கும் போரட்டம் தான் படத்தின் கதை. போராட்டம் எப்படி முடிகிறது என்பதை வாய்ப்புள்ளவர்கள் படத்தில் பார்த்துக்கொள்ளுங்கள். நாம் நம் கதைக்கு வருவோம்.

ஒரு மெலிசான சத்தம் எப்படி எல்லாம் செயல்படுகிறது என்பதை ஒரு நிஜ சம்பவம் ஒரு கற்பனை சம்பவம் என இரண்டு வகையான (இன்னும் சில இருந்தாலும்) மனபதிவுகள் இந்த ஆழ்கடலின் கருவறை முதல் பாகத்தின் துவக்க பகுதியை படிக்கும் போது நினைவுக்கு வந்தன.

ஒரு செடி சத்தத்தை எழுப்பி மனிதனை பொறிவைத்து உணவுக்கு எப்படி பிடித்ததோ...அதே போல ஒரு அமானுஷ்ய சக்தி மனிதர்கள் சத்தத்தின் மூலமாக பொறுவைத்து கருவறையை நோக்கி ஈர்த்து, பொறிவைத்து பிடிக்கிற கற்பனை சித்தாந்தம் ஆபாரமான துவக்கம் என்றால்...





தன் வளையத்திற்குள் வந்த மனிதர்களை அந்த அமானுஷ்ய சக்தி என்ன செய்கிறது? ஏன் செய்கிறது என கதை பயணிப்பது நமக்கு ஒரு செமத்தியான திரில்லர். ஜெட் வேகத்தில் பயணிக்கும் ஆல்பா டீமை தேடும் வேட்டையின் போது ஏற்படும் விதவிதமான மரணங்கள் பற்றிய எனது ஒரேயொரு புரிதலை மட்டும் இங்கு சொல்வது உங்களை தடையில்லாமல் படிக்க உதவும் என நினைக்கிறேன்.




எல்லாருக்கும் எதன் மீதாவது ஒரு மரணபயம் இருக்கும். சமையல் செய்யும்போது கேஸ் வெடித்து செத்திடுவேனோ? குளிக்கும்போது ஏதும் ஷாட்ஆகி மின்சாரம் தாக்கி செத்திடுவேனோ? வண்டி ஓட்டும்போது எதிரில் வரும் லாரியோ பஸ்ஸோ பிரேக்டவுன் பஞ்சர் இப்படி ஏதும் ஆகி என் மேல் ஏறிடுமோ? இப்படி மனசு பலவீனமா இருக்கிற சமயத்தில் ஒரு திகில் கற்பனை ஓடும். அதற்கு யாரும் விதிவிலக்கு கிடையாது. அப்படி அந்த கருவறையின் அருகில் உள்ளார்கள் மனதில் எதில் தன் மரணம் நிகழ்ந்திடும் என நினைத்தார்களோ...அதை அப்படியே நிறைவேற்றுகிறது அந்த அமானுஷ்ய சக்தி!










கப்பலிலும் கருவறையிலும் விதவிதமான மரணங்களை பார்த்து...இது எங்கு,எப்படி முடியுமா? என ஒருவித தவிப்புடன் தன்னதனியே..அதுவும் 'கும்' இருட்டில் ரொம்பவே உள்பகுதிக்கு வந்தது விட்டேன்.நீங்களும் வந்து இணைந்து விட்டால் என் படபடப்பு கொஞ்சமே குறையும், வந்துடுங்க நண்பர்களே!

பதைபதைபுடன்,
மாயாவி.சிவா



NOT FOR SALE

ஆழ்கடலுக்குள் ஒரு

# கருவறை!

பாகம்-2

கதை
சேவியர் டோரிஸன்

ஓவியம்
கிறிஸ்டோப் பெக்

வண்ணம்
ஹோமர் ரெய்ஸ்

மொழியாக்கம்

தமிழ் DIGITEL காமிக்ஸ்

# சில முக்கிய முகங்கள்



**கமாண்டர் ஹேம்ஸ்**
நேபுராஸ்கா நீர்மூழ்கிக் கப்பல் கேப்டன்



**டாக்டர் நார்த்**
கப்பலின் தலைமை டாக்டர்



**லெப்டினன்ட் கோவாக்ஸ்**
துணை கேப்டன்



**சீஃப் டோனோகன் காப்**
மீட்புபடை தலைவர்



**சர்ஜென்ட் ஜீன்**
கப்பலின் சிஸ்டம் ஆபரேட்டர்



**சர்ஜென்ட் ஸ்டில்வுட்**
கப்பலின் மெக்கானிக்



**உபாசக்கி**
மீட்புபடை வீரர்



**டிஸ்பிரஸ்**
மீட்புபடை வீரர்



**மொசாக்கோ பாம்**
மீட்புபடை வீரர்



**லெப்டினன்ட் காலின்ஸ்**
துணை கேப்டன்



**பியூமான்ட்**
கப்பலின் மெக்கானிக்

* நீலம்: மனதின் குரல்


நீங்கள் அங்கிருந்து வெளியே வாருங்கள் ஸ்டீல்வுட்!
நீங்கள் மற்றவர்களுக்காக எதையும் செய்ய முடியாது. நீண்ட காலமாக நாங்கள் உதவிக்காக காத்திருக்கிறோம். அது அவர்களையோ அல்லது உங்களையோ தேர்ந்தெடுக்கலாம்.
ஆராய வந்த ஆல்பா டீமில் நான் மட்டும்தான் தனியே பிரிந்துவிட்டேனா? இல்லை எல்லோரும் பிரிந்து விட்டார்களா? ச்சே...இது என்ன மாதிரியான புதிர் குகையோ..?!
ரேடியோ சிக்னல் கூட இல்லையே...ம்ம்.. ஆனா யாரோ வழிசொல் வது மாதிரி ஒரு உணர்வு... சரி அதையே பின் தொடர்வோம்!
வாருங்கள் ! நாங்கள் அருகில் தான் இருக்கிறோம் ஸ்டீல்வுட்! எங்களை நீங்கள் நெருங்கிவிட்டீர்கள்!
நீங்கள் அந்த கால்வாயை கடந்து முடித்தவுடன்....



....நீங்கள் அங்கே இருப்பீர்கள்.
?!!
கடவுளே! என்னால் எதையும் கையாள முடியும், ஆனால்...
...இதை அல்ல!



கீழே இறங்கும் போதுதான் கவனித்தேன்...
அதை பற்றி யோசித்து பதற்றமடையாமல் இருக்க ஒருமுறை ஆழ்ந்த மூச்சை இழுத்துக்கொண்டு கீழே இறங்க தொடங்கினேன்.
....அந்த பூச்சிகள் கூட்டத்தை!
ஆனால், அங்கு பூச்சிகளுடன் வேறு ஒன்றும் இருந்தது...



ஜூன் 27. மதியம், 13:54
"ஜீன் உங்கள் ஆய்வு முடிவுகளை சொல்லநான் உங்களுக்கு ஐந்து நிமிடம் தருகிறேன். அதற்கு மேல் முடியாது."
நன்றி, லெப்டினெண்ட். நான் முடிந்தவரை சுருக்கமாக சொல்ல முயற்சிக்கிறேன்.
நாங்கள் யுப்ரினனில் இருந்து கிடைத்த 8mm பிலிம்மில் இருந்து, பார்த்த அந்த படங்களை பகுப்பாய்வு செய்தோம். அது நடந்ததை மதிப்பிட உதவியது.
"குறைந்த பட்சம் ஆரம்பத்தில் என்ன நடந்தது, என்பதை அறிந்து கொள்வதற்காவது அந்த படம் வாய்ப்பளிக்கிறது."
"என்னால் முதலில் உறுதிப்படுத்த முடிந்தவை... இந்த படம் அந்த காலத்தில் இருந்த பெரிய துறைமுகமான மர்மன்ஸ்கில் எடுக்கப்பட்டது."
"நடுவில் இருப்பவர் கம்யூனிஸ்டுகளின் சிறப்பு சேவைப்பிரிவில் இருந்த கலோனால். அவரை பற்றிய எந்த தகவலும் நம் டேட்டாபேசில் இல்லை. அவருக்கு பின்னால் இருப்பவர் கமாண்டர் குரோவிச். அவர்களுடன் கைகுலுக்குபவர் p.c செகரட்டரி நிகிதா சர்கோவிச் குருசோவ்!"
"உலகின் சக்தி வாய்ந்த மனிதராக இருந்த அவர், இந்த பணியில் தனிப்பட்ட ஆர்வம் கொண்டிருந்தார்."
"அது எல்லாம் சரிதான், ஜீன். அவர்கள் இந்த இடத்தை எப்படி கண்டறிந்தனர்? மேலும் எதற்காக அவர்கள் மிகவும் பயந்தனர்?"
"இவ்வளவு சக்தி வாய்ந்த மனிதர் இறங்கி இருக்கிறார் எனில், முடிவில் அவர்களுக்கு ஒரு சிறந்த ஆயுதம் கிடைக்கும் என எண்ணி இருக்கலாம்!"


இது பைத்தியக் காரத்தனமானது! ரஷ்யர் களிடையே ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகள் இருக்கும் போது, இந்த பழம்பாறைகளிடையே ஆயுதத்தை தேடினார்களா!
நம்பி தான் ஆக வேண்டும் லெப்டினென்ட். இதற்காக அவர்கள் புதிய நீர் மூழ்கியை உருவாக்கியதுடன், தெர்மோநியூக்ளியர் கருவியையும் கொண்டு சென்றனர்.
சரி, இது எந்த அளவு நம் தற்போதைய சூழலை பாதிக்கிறது?
சிம்பிள் லெப்டினென்ட். ரஷ்யர்கள் எங்கு தேடிக்கொண்டிருந்தார்களோ! ....அல்லது எங்கு சிக்கிக்கொண்டார்களோ...அங்கு தான் நாம் இருக்கிறோம்!
அவர்கள் தங்களுக்குள்ளேயே எந்த கேள்வியை கேட்டுக் கேட்டுக்கொண்டார் களோ..நாமும் இப்போது அதே கேள்வியை கேட்க வேண்டும். **நாம் வீடு திரும்ப வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்.**
நீ நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கிறாய்!
"இல்லை, லெப்டினென்ட். நாம் இந்த படத்தையும் டாக்குமன்டுகளையும் ஆராய்வதோடு நில்லாமல், நம்மை சுற்றியுள்ளவற்றை முழுமையாக தெரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்...."
போதும், இந்த தெளிவற்ற கோட்பாடுகளை இத்துடன் நிறுத்திக் கொள்வோம்.
ஜீன், ஒரு காலத்தில் ரஷ்ய அரசு இதில் ஈடுபட்டுள்ளது. அது தன் கண்டுபிடிப்பில் ஆர்வமாகவும் இருந்துள்ளது. ஆனால் உலகின் அனைத்து பகுதிகளிலும் இது பற்றிய தேடல் ஓய்ந்து போய் அமைதியாகிவிட்டது.
நமக்கு நேரம் நான்கு மணிக்கும் குறைவாகவே உள்ளது. அதற்குள் நாம் இந்த நீர்மூழ்கியை கிளப்புவதற்கான சக்தியை உற்பத்தி செய்ய வேண்டும். என்னுடைய வார்த்தைக்காக தலைமை மெக்கானிக் காத்துக் கொண்டுள்ளார். நான் உங்களிடம் சர்க்யூட்டுகளை மீண்டும் இயக்குவதற்கான திட்டத்துடன் காத் திருக்கிறேன். காலின்ஸ், கமாண்டர் ஹேம்ஸ் குழு பற்றிய முதல் அறிக்கையை தாருங்கள்.
"காலின்ஸ், என்ன பார்த்துக் கொண்டு இருக்கிறீர்கள்?"
இந்த வரலாற்று விவரங்கள் லெப்டினென்ட்...
யுக்ரிட்டின் கட்டிடக்கலை & தொல்லியல் பற்றிய ஆய்வு!
"...வெறும் விபரங்கள்..."


இப்போது தொடர்பு கொள்ளுங்கள் கமாண்டர். இந்த கேபிள் நெப்ராஸ்கா-வுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொடுக்கும்.
'நெப்ராஸ்கா, நான் ஹெமிஸ் பேசுகிறேன். நாங்கள் கருவறையின் வாயிலில் நிற்கின்றோம். இன்னும் சில நிமிடங்களில் அடுத்த செயல்பாட்டை தொடங்கப் போகின்றோம்.'
'இங்கு ஆல்பா டீமுக்கான எந்த தடயமும் இல்லை. ஸ்டீல்வுட் தவிர மற்றவர்களின் உபகரணங்களை மட்டும் கண்டோம். ஸ்டீல்வுட்டிடம் இருந்து மட்டும் சிக்னல் கிடைக்கிறது.'
'இங்கு இதயதுடிப்பு 50ல் உள்ளது. ஆக்ஸிஜன் 70, அழுத்தம் 6. அவர்கள் வேறு இடத்தில் இருக்க முடியாது. இங்கு தான் இருப்பார்கள் என நினைக்கிறேன்.'
"ஸ்டீல்வுட்டிடம் இருந்து வேறு எதையும் பெற முடியவில்லை. அவருடைய சிக்னலில் ஏதும் கோளாறு ஏற்பட்டு இருக்கலாம்."
"மேலும் கூடுதல் தகவல் கிடைத்தவுடன் உங்களை தொடர்பு கொள்கிறேன். ஓவர் !"


நண்பர்களே! நாம் இதன் மூலம் ஆல்பா டீமை தொடர முடியும். அவர்கள் உடையில் இருந்து வரும் சிக்னலை இதனால் கண்டறிய முடியும். இதன் மூலம் அவர்கள் எவ்வளவு தூரத்தில் எந்த பாதையில் செல்கின்றனர் என அறிந்து பின் தொடர முடியும்.
"அவை சில இடங்களில் இணைந்தும், சில இடங்களில் பிரிந்தும் காணப்படும். அவை ஒருங்கிணைந்து நிற்கும் இடத்திற்கு நாம் செல்ல வேண்டும்."
FINCHER
ZIMMER
மெக்கன்ஸி
McKENZIE
3756.1532m
"எங்கு அவை வலுவாக ஒருங்கிணைந்துள்ளதோ அதுவே நாம் பின்பற்றி செல்ல வேண்டிய பாதை."
ஏதும் கேள்விகள் உள்ளதா?
அவை ஏன் நகர்கின்றன கமாண்டர்?
ஒருவேளை அவை கருவறையின் உள்ளே நீண்ட தொலைவில் இருந்தோ,அல்லது பாறைப்பிளவில் இருந்தோ வரலாம்...
...அல்லது அவை இந்த குகையால் தடை செய்யப் பட்டிருக்கலாம். பீதி அடையத் தேவையில்லை.
நீங்கள் உண்மையிலேயே இந்த தேவதைக் கதைகளை நம்புகிறீர்களா, கமாண்டர்?
சூழ்நிலை அப்படி உள்ளதால் நான் இவ்வாறு கூறுகிறேன்.
சரி, பேச்சை நிறுத்திவிட்டு இன்னும் இரண்டு நிமிடத்தில் இங்கிருந்து கிளம்பும் வழியைப் பார்க்கலாம்! அங்கு நம் நண்பர்கள் நான்கு மணிநேரம் ஆகிவிட்டால் போய்க்கொண்டே இருப்பார்கள்...
"...உங்களின் ஆயுதங்களை எடுத்துக் கொள்ளுங்கள்."
முழு வெளிச்சத்தையும் வெளிப்படுத்துவது நல்ல யோசனை தான். இல்லையெனில் நாமே ஒருவரை ஒருவர் சுட்டுக்கொள்வோம்!
ஆமாம், இதில் நாம் கவனமாக இருப்பது நல்லது தான்.



நீ உண்மையிலே யே பூசாரியா டிஸ்பிரஸ்?
இல்லை. என் குடும்பத்தில் கடவுளுக்கு சேவை செய், அல்லது நாட்டுக்கு சேவை செய் என்றனர். என் அண்ணன் முந்திக் கொண்டதால் நான் இந்த பாதையைத் தேர்ந்தெடுத்தேன்!
சில நேரங்களில் சிலருக்கு இப்படியும் அமைந்து விடுகிறது...
ஆனால் நீ இப்படியே உட்கார்ந்திருந்தால், உனக்கு பின் உள்ளோர், அனைவரும் பதவி உயர்வு பெற்று சென்று விடுவர். உனக்கும் எலியைப் போல முண்டியடித்து செல்ல வேண்டிய அவசியம் இருக்காது...
"உன் வாய்க்கு ஓய்வே கிடையாதா உபசாக்கி?"
வாருங்கள்! நாம் சின்னலைத் தொடர்ந்து 20 அடி இடைவெளியில் செல்வோம்.
காப், நாம் ஆல்பா டீம் செல்லும் அதே பாதையில் தான் செல்கிறோமா?
ஏன் அதில் உனக்கு ஏதேனும் பிரச்னையா டிஸ்பிரஸ்? பயப்படாமல் தொடர்ந்து வா.
இல்லை, அவர்களைப் பின்பற்றி நாமும் அதே பாறைப்பிளவில் விழுந்து விடக்கூடாதல்லவா.
"சீப் இங்கு, புகை பிடிக்கலாமா?"


8


நான கோவாக்ஸிடம் அளிக்கும் இந்த டேட்டா துள்ளியமாக உள்ளது!
ஜீன்...என்னுடன் ஒரு இரண்டு நிமிடம் செலவிட முடியுமா?
இப்போது நேரம் இல்லை. அனைத்தையும் ஒப்படைக்க வேண்டும். அவர் கிளம்ப நினைக்கிறார்.
இது எப்படி உங்களால் முடிகிறது? மூன்று மாதங்களாக இங்கு பணிபுரிகிறீர்கள். உங்களால் உங்கள் நண்பர்களை எப்படி மறக்க முடிகிறது?
நீங்கள் யாரை பாதுகாக்கப் போகிறீர்கள் மேடாக்ஸ்! உங்களுக்கு என்ன வேண்டும்?
எங்களுக்கு உண்மை தெரிய வேண்டும். நம்மை சுற்றி சரியாக ஒன்றும் நடக்கவில் லை. ஜீன் உங்களுக்கு தெரியும். அதிகாரிகளுக்குத் தெரியும்.
"உங்களை கேட்காமல் அதிகாரிகள் எந்த முடிவும் எடுத்திருக்க மாட்டார்கள்."
ஆல்பா டீமை தேடி சென்ற கமாண்டர் டீமையும் விட்டுவிட்டு கிளம்பப் போகிறோமா?
கமாண்டர் சென்று நீண்ட நேரம் ஆகிவிட்டதென தெரியும். ஆனால் அதுபற்றி யாரும் பேசுவதாக தெரியவில்லை. நாம் இந்த சூழ்நிலையை எவ்வாறு கையாளப் போகிறோம்! இங்கு என்னதான் நடக்கிறது?
நாம் இலக்கை நோக்கி செல்கிறோம்! யாரும் தவறாக நடக்கவில்லை. நாம் இப்படியே இங்கு அமைதியாக நீண்ட நேரம் இருக்க முடியாது! நாம் ஒன்றும் இங்கு சுற்றுலா வரவில்லை.
புரிகிறதா, மேடாக்ஸ்?
"எல்லாவற்றிற்கும் காரணம் தேடாதே..."



தாமதத்திற்கு வருந்துகிறேன் லெப்டினென்ட். அனைத்தும் இங்குள்ளது.
இந்த ட்ரைவ்களில் செக்சன் 7,9,10 க்கான அனைத்து தரவுகளும் உள்ளன. நம்மால் ரியாக்டர் 2 மூலம் 8% முதல் 10% சக்தியை பெற முடியும்.
நல்லது ஜீன்.
ஆனால் செரினோ கணக்கு வேறாக உள்ளது.
??!!...
ஏன் அப்படி எனவிளக்கிக் கூறு செரினோ...
ஜீன், ரியாக்டர் 1 ல் ரூதர்போர்டால் வெடிப்பு ஏற்பட்டபின், அவை சரியாக வேலை செய்யவில்லை...
உடைத்துக் கூறு செரினோ! இது யாரையும் குறை சொல்லும் நேரம் அல்ல...புரியுதா..
ஜீன் சொல்வது சரிதான். நான் தான் நமக்கு தேவையான சக்தியில் 80% ரியாக்டர் 2 மூலம் பெற்று பெற்றுவிடலாம் என தவறாக கணித்துவிட்டேன்.
அதாவது நாம் ரியாக்டர் 1 இயங்குவதற்கும், ரியாக்டர் 2 பழுது பார்க்கவும் பயன்படுத் தலாம் என தவறாக கணித்து விட்டேன்.
ஆனால் பாதிப்பின் சில நிமிடங்களுக்கு பின்னே தான் என்னால் கவனிக்க முடிந்தது. நான் தவறாக கணித்து விட்டேன்...
அதனால் என்ன சொல்ல வருகிறீர்கள்?
கையிருப்பில் உள்ள 10% சக்தியின் படி...அதாவது நம்மிடம் இன்னும் 5 நிமிடத்திற்கான உந்து சக்தியே உள்ளது. அவர்கள் இப்போது கிளம்பினாலும், இங்கு வரவே 30 நிமிடம் ஆகும்.
அதனால் என்ன சொல்ல வருகிறீர்கள்....
ஆம். நாம் ஸ்தம்பித்து விட்டோம்!
10

DSRV: ஹெலிகாப்டர் போலவே உள்ள சின்ன நீர்மூழ்கிக் கப்பல்.




"...அதற்கு மேல் ஒரு நிமிடம் கிடையாது ஜீன்."


'நெப்ராஸ்கா, நாங்கள் தொடர்ந்து தேடல் பணியில் உள்ளோம். இங்கு வாழ்கைக்கான எந்த அடையாளமும் இல்லை.'
இங்கு போதுமான வெப்பம் இல்லை. Co2 அதிகமாக உள்ளது. ஆனாலும் சுவாசித்துக் கொண்டு தான் இருக்கிறோம்.
"ஆல்பா டீமிடம் இருந்து எந்த நகர்வும் இல்லை. அவர்களிடமிருந்து ரேடியோ தொடர்பும் இல்லை."


கமாண்டர், யுட்ரிக்ஸ்கள் அனைவரும் அமைதியான வியாபாரிகள் என ஜீன் கூறினான் அல்லவா?
ஆமாம்.
ஒப்புக் கொள்கிறேன், ஆனால் இது நம்புவதற்கு கடினமானது.
ஆனால் இங்கு சுற்றி அலங்காரமாக உள்ளவைகளைப் பார்த்தால் அவர்கள் "அமைதியானவர் களாக" தெரியவில்லை.
"நான் ஜீன் கொடுத்த ட்ரான்ஸ்லேசன் அடிப்படையில், இங்குள்ளவற்றை மொழி பெயர்த்து சொல்கிறேன்."
"ஒருவேளை அவர்கள் தங்கள் முக்கியமான விருந்தாளிகளை ஈர்க்க இவ்வாறு செய்து இருக்கலாம்!"
ஒரு பெண் தன் அழகால் மயக்கி தன் வலையில் விழ வைப்பளே.... அப்படியா..?
உன்னோட உதாரணம் இருக்கே...
"ஹேய்.. சிக்னல் வருது!"


எழுபது அடிக்கு அப்பால்!
BEEP! BEEP!
இந்த திடீர் சிக்னலுக்கு காராணம் யார்? அல்லது எது?
"ஐம்பது அடி..."
BEEP BEEP!
"சுட தயாராக இரு டிஸ்பிரஸ்!"
"முப்பத்து ஐந்து அடி"
பீப்! பீப்!
பீப்! பீப்!
"அது நமக்கு மேலுள்ளது!"
என்னால் நம்பமுடியலை ...இது..இது...
"ஸ்டீல்வுட்!"


"வெடிப்பினால் காயம்பட்டவர்களில் கடந்த ஒரு மணி நேரத்தில், நான்கு பேருக்கு புதிய பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன! இது ஒரு தொற்று நோய்!"
alised service. Once the 2 hou has been recorded, the data is loaded to the central service i e way. Again, this process take 5 minutes. Data can then be vided to the investigators and t nsor in either paper or electron mat at regular intervals throug study.
LOOD PRESSURE 9,6
EMPERATURE 40.1
RATE 7
இது ஒரு தொற்று நோய் என்றே எதிர்பார்க்கின்றோம். அனைவரிடமும் அதற்கான அறிகுறிகள் காணப்படுகிறது. ஆனால் உயர் நிலையில் அவை ஒன்று போல இல்லை.
"கடந்த ஒரு மணி நேரத்தில் ஒருவருக்கு பிளேக், ஒருவருக்கு லிஸ்மேனியா, ஒருவருக்கு டிரிப்பானிசோம் மற்றும் மூவருக்கு தொற்று நோய் ஏற்பட்டுள்ளது. ஆனால் இவை எல்லாம் ஒரு நூற்றாண்டுக்கு முன்பே ஒழிந்து போன நோய்கள்."
இது எப்படி பரவுகிறது?
எனக்கு தெரியவில்லை ஹாரிஸ்! நானும் பலவிதமான சிகிச்சை அளித்து என்ன நடக்கிறது என பார்க்கிறேன்.
சரி, நீங்கள் உங்கள் இருக்கைக்கு திரும்புங்கள்! இது பற்றி அதிகம் சிந்திக்க வேண்டாம்!
இந்த பரிசோதனை முடிவுகளை என் அலுவலகத்திற்கு சென்ற பின்னும் ஒருமுறை பார்க்க வேண்டும்.
நிச்சயமாக பார்க்கலாம், டாக்டர்...
...நாங்கள் எல்லோரும் உங்களைத் தான் நம்பி இருக்கிறோம்.
நன்றி ஹாரிஸ். இதற்காக சிறப்பு அக்கறை எல்லாம் எடுத்துக் கொள்ள வேண்டாம். நான் உங்கள் நண்பர்களை நன்கு கவனித்துக் கொள்கிறேன். அனைத்தும் என் கட்டுப்பாட்டில் தான் உள்ளது!
அனைத்தும் கட்டுப்பாட்டில்...
ஆமாம், கட்டுபாட்டில்!


தோலில் ஏற்படும் தொடக்க நிலை வெண்படல அலர்ஜி, உயர்நிலையில் கியூடேனியல் மீகால் என்னும் நோயினை ஏற்படுத்துகிறது. இதற்கு இயல்பான சிகிச்சையுடன், கூட்டு மருந்தாக அமாக்ஸிலினையும் C3G யையும் பயன்படுத்த வேண்டும்.
"ஆனால் இயல்பான சிகிச்சையால் எந்த முன்னேற்றமும் இல்லை."
Amoxicilline
↦ INEFFECTIVE
C3G
↦ INEFFECTIVE
"பெரிய ஆயுதங்களை வெளியே எடுக்கும் நேரம் வந்து விட்டது."
Trenchcoat space
C3G
↦ INEFFECTIVE
Cotrimoxazole
↦ INEFFECTIVE
Chloramphenicol
↦ INEFFECTIVE
"ஷிட் !!"
டாக்டர், ஏன் என்னை குணமாக்கவில்லை?
ச்சே..திரும்பவும் அந்த காட்சிகள்..குரல் கேட்கிறதே, மனஅழுத்தம் காரணமோ..?
ஒன்று அல்லது இரண்டு... மாத்திரை அவ்வளவுதான்...
பெரிதாக பாதித்து விடாது... மன அழுத்தம் குறையலாம்!
டிரிங்ங்!
RINOL
PROZAC
"டாக்டர் நான் பிரிஜ், கமாண்டர் டீமுக்கு உங்கள் ஆலோசனை தேவைப்படுகிறது. உடனே கண்ரோல் ரூமுக்கு வாருங்கள்!"



"அவர்களுக்கு ஏதோ பிரச்சினை என நினைக்கிறேன்..."
உடல் முழுக்க ரத்தகட்டிகள் இருக்கிறது.
நான் டாக்டர்... உங்கள் பேச்சை கேட்டுக்கொண்டுதான் இருக்கிறேன்.
காப்..அங்கு என்ன பிரச்சினை?
"டாக்டர்...மானிட்டரில் ஸ்டீல்வுட்டின் உடையில் உள்ள கதிரியாக்கத்தை சரி பாருங்கள்!"
ஓ,நோ!
டிஸ்பிரஸ், அழுத்தத்தை சீராக பராமரி! காப் வேகமாக கார்டியாக் மசாஜ் செய்! மோசாக்கோ ஆக்ஸிஜன் கொடு, ஹேன்சன் உன்னிடம் டெபிபிலேட்டர்(பம்ப்) கருவி உள்ளதா?
"இல்லை, என்னிடம் இரண்டு ஜோடி மெடி பாக்கெட்டுகள் தான் உள்ளது."
"சரி, பரவாயில்லை! இரண்டு பிளாஷ்டா ஊசி போடு! 10 ccs அட்ரினலின் கொடு!"
கமான் ஸ்டில்வுட்... கொஞ்சம் தாக்குபிடி..ச்சே...
டாக்டர், இதய துடிப்பு மெதுவாகிறது. நாங்கள் அவரை இழந்து கொண்டிருக்கிறோம்!"
"அட கொடுமையே!"
டிப்போதார் மின் கொடுங்கள்.
"கொடுத்து விட்டோம். இப்போது 5 ccs நார்அட்ரினலின் கொடுத்துள்ளோம்."
"டாக்டர்! அவரின் இதயதுடிப்பு இன்னும் மெதுவாகவே உள்ளது."
ALERT


ஸ்டில்வுட்!
மார்பின் இருந்தால் கொடுங்கள் ! ரெக்டின் இன்ஜெக்ஷன் தயார் செய்யுங்கள்! அப்புறம்...
"எதுவும் செய்வதற்கில்லை டாக்டர்..".
"அவர் இறந்து விட்டார்."
ஒன்று அல்லது இரண்டு... அவ்வளவுதான்... மருந்தை எடுப்பதா? வேண்டாமா..ம்...
உங்களுடைய உதவி சிலருக்கு அவசரமாக தேவை!
"எங்களுக்கு நீங்கள் தேவை டாக்டர்!"


"நீங்கள் உதவாவிட்டால் ...குழுவில் உள்ள அனைவரும் மொத்தமாக இறந்து விடுவர்!"
ஜூன் 27,மதியம் 2.22
ஜீன் எதையோ மறைக்கிறார்! அது என்னவாக இருந்தாலும் நல்ல செய்தி அல்ல.
நீ தேவையில்லாமல் குழப்பிக்கொள்கிறாய் ஸ்பால்டிங். ஸ்டீல்வுட் இறந்து விட்டார். நம்மிடம் பல நோயாளிகள் வேறு. முதல் குழுவுக்கு என்ன நடந்தது என்றே தெரியவில்லை.
உங்கள் முகத்தில் ஒரு பயம் தெரிகிறதே அதற்கு என்ன அர்த்தம்? உங்களை நீங்களே ஏமாற்றி கொள்ளாதீர்கள். நான் எதுவும் தெரியாமல் சந்தேகம் எழுப்ப-வில்லை. அவர்கள் உங்களை வழிக்கு கொண்டுவர என்ன வேண்டுமானாலும் செய்வார்கள்!
?!!
"எனக்குத் தெரியும்!"
ஏய்! அங்கே பார்!


டங்ங்!
எனக்குத் தெரியும். ஏதோ நடக்கிறது!
ஸ்பால்டிங், உனக்கென்ன பைத்தியமா?!
எனக்குத் தெரியும்!
அட ச்சே!
இது மேடாக்ஸ் அல்ல, நண்பர்களே...
அது அவரல்ல. அது இருந்தது...
"தலையில் கொம்புடன் அந்த சாத்தான் இங்கு இருந்தது! நான் உறுதியாக பார்த்தேன்... **எனக்கு தெரியும்!**"


"நீ முடித்து விட்டாயா?"
முடிந்தது கமாண்டர். இதை செய்வதற்கு மன்னிக்கவும். இது தான் நடைமுறை. இதனை ஒரு வேதியியல் அல்லது உயிரியல் ஆயுதமாகவும் பயன்படுத்தலாம்.
இதில் நாம் கையாள என்ன உள்ளது என எனக்கு சந்தேகமாகவே உள்ளது. சரி, நீங்கள் ஆக வேண்டியதை பாருங்கள்.
திசுக்களின் பரிசோதனை முடிவுகள் தெரிய எவ்வளவு நேரம் பிடிக்கும் ?
இதோ துவங்கி விட்டது...சில நிமிடங்களில் தெரிந்து விடும்.
ஸ்டீல்வுட், நாங்கள் இங்கு உன்னை விட்டு செல் கிறோம். அனைத்தும் முடிந்த பின் தான் நாங்கள் வருவோம். நான் அனைவரையும் கண்டு பிடிக்காமல் இந்த கருவறையை விட்டு அகலமாட்டேன் என சத்தியம் செய்கிறேன். இதில் நான் தோல்வியுற்றால்....
அதன் விளைவுகளை நானே அனுபவிக்கின்றேன்.
சரி கிளம்புவோம்! நேரம் குறைவாக உள்ளது! நாம் ஆல்பா டீமை தொடர்ந்து தேட வேண்டும்.
பரிசோதனை என்ன சொல் கிறது?
இதில் வேதியியல் மற்றும் உயிரியல் பாதிப்புகள் இல்லை. ஆனால் இரத்தத்தில் உயர் நிலையில் ஒவ்வாமைக்கான கூறுகள் காணப்படுகின்றன.
அது என்ன?
அது புதுமையானது தான் கமாண்டர். சிலந்தி கடித்ததனால் ஏற்ப்பட்ட அலர்ஜி போல தெரிகிறது.
மொசாக்கோ, இது எப்படி சாத்தியம் ! நாம் கடலுக்கடியில் 3000 அடி ஆழத்தில் இருக்கிறோம். இங்கு நீர் தூயதாக இல்லை. வெளிச்சமும் போதாது. எனவே இங்கு பூச்சிகள் இருக்க வாய்ப்பில்லை. டாக்டர் நார்த்திடம் தரவுகளை கொடுத்து ஆராயச் சொல்.
ஆனால் ஸ்டீல்வுட்டின் மாறுபட்ட மரணத்தில் சிலந்தி கடித்ததற்கான தடம் நேரடியாகத் தெரிகிறதே!
ஓகே...நீ முடிவா என்ன சொல்ல வருகிறாய்..?
ஏனெனில் **அவர் சிலந்தியை வேறு எதையும் விட அதிகமாக வெறுத்தது தான் காரணம்!**



"நாம் மாட்டிக் கொண்டோம் டாக்டர்...நாம் வசமாக மாட்டிக் கொண்டோம்!"
கோவாக்ஸ் சொன்னது தான் சரி! இன்னும் பத்து நிமிடத்தில் எஞ்சினை இயக்க வேண்டும்! அனைத்து தேடல்களும் ஒரு விஷயத்தில் ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.
என்ன பார்க்கிறீர்கள், டாக்டர்?
நாம் இங்கிருந்து குகைக்கு சென்ற பாதையை வரைபடத்தில் காட்ட முடியுமா?
"முடியும்! நாம் இந்த தரவுகளை நெப்ராஸ்காவிற்கும் வழிகாட்ட பயன்படுத்தலாம்."
குகையின் இந்த பகுதியை பெரிது படுத்தி காட்ட முடியுமா?
நன்றி. இப்போது குகைக்கும் அதன் மேற்பரப்பிற்குமான புவியியல் அமைப்பைக் காட்டுங்கள்.
புவியியல் அமைப்பா? டாக்டர் நீங்கள் என்ன கோட்பாட்டை உருவாக்க நினைக்கிறீர்கள் என தெரியும். ஆனால் அதற்கெல்லாம் இப்போது நேரமில்லை!
முதலில் காட்டு, ஜீன்!
"எதற்கு இந்த விவரம் என தெரியலை...ஒகே, நான் முதல் படத்தை கலரில் காட்டுகிறேன்!"
"அங்கு மணலும், சுண்ணாம்பும், களிமண்ணும் தான் உள்ளன திருப்தியா?"
கிட்டத் தட்ட!
"நம்மால் அந்த குகையின் மேற்பகுதிக்கு சென்றடைய சாத்தியமாகுமா?"
அது இங்கிருந்து 8 மைல் தொலைவில் உள்ளது. நம்மால் அங்கு செல்ல முடியும் என உறுதியாக சொல்வதற்கு இல்லை.
அனைத்தும் ஒன்றாகப் பொருந்தும் கடைசிக் கேள்வி ஜீன்... நெப்ராஸ்காவால் பனிப்பாறைகளை உடைக்க முடியுமா?
முடியும், துருவப்பகுதியில் அவ்வாறு செய்திருக்கிறோம். ஆனால் இப்போது நாம் தீர்க்க ரேகை அருகில் இருக்கிறோம். இங்கு என்ன செய்ய முடியும்?
"உடைக்க முடியும் என்ற தகவல் போதும் ஜீன், அது நம்மைக் காப்பாற்றும்..."


"...அது அனைவரையும் காப்பாற்றும் ஜீன்!"
அதில் சைரன் இல்லையென்றால் அது கடற்கொள்ளையர் உடையதாகவும் இருக்கலாம். இந்த இடத்தில் புதையல் இருக்கலாம். தங்கப்புதையல் அல்லது சிலைகள் ஏதாவது இருக்கலாம்.
எல்லா காலங்களிலுமே தங்கம் அனைவரையும் ஈர்த்துள்ளது. புதையலுக்காக எவ்வளவு யுத்தங்கள் இவ்வுலகில் நடந்துள்ளன!
தங்கம் நம்மைச் சுற்றியல்ல, உன் மனதில் தான் உள்ளது உபசாக்கி!
நான் ஏதோ அலங்காரமாக யூகித்துப் பேசுகிறேன் என எண்ணுகிறாயா? யுக்ரிட்ஸ் ஏன் இந்த இடத்தை எகிப்தில் உள்ளதைப் போல் வலுவான கான்கிரீட்டால் கட்டியுள்ளனர் தலைவரே..?
நல்ல கேள்வி உபசாக்கி.
கிராக்!
ஜாக்கிரதை! சரிகிறது!



ஆஆஆஆ!!!
மொசா க்கோ!
என் பேச்சை கேட்க முடிகிறதா, மொசாக்கோ?
சர்ஜென்ட் உன் நிலை என்ன?
பதில் சொல்!
என் கை உடைந்து விட்டது என நினைக்கிறேன், கமாண்டர்.
என் உடையும் இந்த தண்ணீரும் என்னைக் காப்பாற்றி விட்டது. இல்லையெனில், என்னால் இப்படி பேசிக் கொண்டிருக்க முடியாது..


BEEP! BEEP!
என் விளக்கு வெளிச்சம் குறைந்து விட்டது. என் உடைக்குள் நீர் புகுந்து விட்டது! நான் ஒரு நரகத்தில் இருப்பது போல உணர்கிறேன் கமாண்டர்!
நான் நெப்ராஸ்கா வருவது கடினம் என எண்ணுகிறேன்!
பதட்டப்படாதே மொசாக்கோ...ஒரு நிமிடம் ஆசுவாசப்படுத்திக் கொண்டு உன் மார்பினை எடுத்து சாப்பிடு. நான் கீழே வந்து உன்னை மீட்கிறேன்!
"கமாண்டர்! நான் இருப்பதை சிக்னலால் காட்டுகிறேன். இந்த கால்வாயில் ஏதோ இருக்கிறது என எண்ணுகிறேன்!"
அது என்னை நோக்கி வருகிறது! அது மனிதன் அல்ல! என்னை நோக்கி வேகமாக வருகிறது!
அங்கு யாரும் இல்லை சர்ஜென்ட்! உங்கள் கருவிகள் தவறாக காட்டுகிறது!
என்னால் முடிந்த அளவு வேகமாக வருகிறேன் சர்ஜென்ட்!
கமாண்டர்! என் விளக்கு வெளிச்சம் குறைந்து விட்டது! அணையப் போகிறது!
சீக்கிரம் வாருங்கள்!
BEEP! BEEP!
கமாண்டர்! எனக்கு சத்தம் கேட்கிறது, என்னைச் சுற்றி உள்ளது!


அங்கே இருக்கிறது!
டுமீல்! டுமீல்!
பளுக்!
?!!
ஆஆஅஆஆ!!
ஷிட்! நேரம் இல்லை!
clic!..
சர்ஜென்ட்! எங்கே இருக்கிறீர்கள்?
சர்ஜென்ட்!
ஓ, நோ...
"கடித்து குதறிப் போட்டுள்ளது...ச்சே..."



லெப்டினென்ட், நீங்கள் எங்களை பலியிடுவதாக இருந்தாலும்கூட நாங்கள் உங்களை விட்டு விலக போவதில்லை.
அனைவரும் ஒன்று கூடுங்கள்! நாம் சண்டையிட எந்த காரணமும் இல்லை. பெர்னீஸ் இன்னும் அழுது கொண்டிருக்கிறான்!
"இது கடந்த ஒரு மணி நேரத்தில் ஏற்பட்ட மூன்றாவது மோசமான நிகழ்வு."
இல்லை... அவர் இல்லை...
வில்சன் அழுக்காக இருப்பதாகக் கூறி, ரேசரால் கிளித்துக் கொண்டான். கார்டிஸ் அதிக வெளிச்சம் வருவதாகக் கூறி துளையிடும் கருவியால் கண்ணை குத்திக் கொள்ள முயன்றான்.
ஜீனுக்கு நீங்கள் கொடுத்த ஒரு மணிநேரம் முடிந்தது. நீங்கள் கூறியது போலவே அவன் எதையும் கண்டுபிடிக்கவில்லை, லெப்டினென்ட்! எனவே நம் "திட்டத்தை" செயல்படுத்தலாம் ?
எனக்கு நினைவூட்ட வேண்டாம் காலின்ஸ்.
என்னை அந்த P.A டர்னரிடம் அழைத்துச் செல்லுங்கள்.
இல்லை... அவர் இல்லை... இல்லை...
"**அனைவரும் கவனியுங்கள்!** லெப்டினென்ட் கோவாக்ஸ் பேசுகிறேன்."
"நீங்கள் அனைவரும் நெருக்கடியில் உள்ளீர்கள், எனக்கு புரிகிறது."
"நாம் இப்போது மோசமான நிலையில், தவறான இடத்தில், தவறான நேரத்தில் இருக்கிறோம் என உங்களுக்கு புரிந்திருக்கும்."
"உங்களுக்கு தெரியும், உண்மையான பிரச்சினை என்னென்று...உங்கள் கால் சகதியில் புதைந்து விட்டால், அதற்கு காரணம் கால்கள் அல்ல... தலைதான் இல்லையா!"


அதனால் இப்போதிருந்து, நான்தான் இந்த நீர்மூழ்கியின் புதிய தலைவர்.
"கமாண்டர், பிரச்சனையை நாம் சந்திக்கும்படி செய்து விட்டு சென்று விட்டார். ஆனால் நான் உங்களுடன்
?
"இப்போதிருந்து நான், இந்த நீர் மூழ்கியின் முழுப்பொறுப்பையும் எடுத்துக் கொள்கிறேன். கவலை கொள்ள வேண்டாம்..."
...உங்களுக்கு என்ன கிடைத்தது? இங்கு என்ன நடக்கிறது? என்ற கேள்வியை இப்போது தவிர்த்து...இதை பின்னாளில் கேட்க்கொள்ளும் போது இரண்டு வார்த்தைகள் உங்களுக்கு பதிலாக கிடைக்கும்..அது: கடமையை செய்தோம்; கௌரவப்படுத்தப்பட்டோம்.."
புழுக்கள்! என்னால் உணர முடிகிறது! என் பற்களில் புழுக்கள்!
நான் இதை நிறுத்த வேண்டும்!
நீங்கள் என்னை நம்புகிறீர்களா? என்னால்...
?!!
இல்லை! அவ்வாறு செய்யாதே, மல்லாரி!
துப்பாக்கியை வாயில் இருந்து எடு!
டுமீல்!
இது என்ன விபரீதம்..!



“பாம் மொசாக்கோ எங்கே?”
ஏன், என் நண்பனை சாக விட்டாய்?
உன்னுடைய பேசும் தோனியை மாற்று உபசாக்கி! இல்லையேல் பதிலைக் கேட்க நீ இருக்க மாட்டாய்!
இல்லை, காப்! அவன் சொல்வது சரிதான். நான் தான் அவர்களை இதற்குள் இழுத்து விட்டேன்.
நாம் ஆல்பா டீமை விரைவில் பிடித்து விடலாம். ஆனால் நாம் உடனே திரும்பவில்லையானால் நெப்ராஸ்கா கிளம்பிவிடும். மொசாக்கோ விற்கும் ஸ்டீல்வுட்டிற்கும் என்ன நடந்தது என சொல்ல என்னிடம் எந்த விளக்கமும் இல்லை!
நமக்கு ஒரே வழி தான் இருக்கிறது. நீங்கள் சிறப்பாக செயல்பட்டீர்கள்! நீங்கள் இப்போதே நெப்ராஸ்கா விற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டும்.
நான் தனியாக தொடர்ந்து தேடுகிறேன்.
?!
நானும் உங்களுடன் இருக்கிறேன் கமாண்டர். வேறு எதுவும் தோன்றவில்லை.
நானும் இருக்கிறேன்...
என் நண்பன் பாமிற்காக..
என் தாய் எப்படி கடவுளைப் பார்த்தாள் என கூறிக்கொண்டே இருப்பாள். ஆனால் நான் சாத்தானைப் பார்க்க விரும்புவதாகவே கூறுவேன். அதனால் நான் எதற்கும் பயப்படவில்லை.
பயப்படவில்லையா, மன்னித்துவிடு டிஸ்பிரஸ்! நீ தளர்சியடைவதற்காக இதை கூறவில்லை. என்னால் மற்றவர் யாரும் இறப்பதை நான் விரும்பவில்லை.
ஓ? நீங்கள் மனைவி, குழந்தையைப் பற்றி பேசவில்லை அல்லவா...?


மனைவி
மற்றும் குழந்தை...
ULANCE
ותפארת לו מן האדם
פ"נ
היקר באדם, נעים זמירות ישרא
ינע בעשר אצבעותיו עם הצבו
ועמד על המשמר באון וחיל
בעין טובה וסבר פנים מאירות
וכתר שם טוב עולה על גביהם
שמעון בוסביב בר רד
נלב"ע ט"ז חשון תשס"א
ת'נ'צ'ב'ה
ரேச்சல் ஹோம்ஸ்
1994 - 2028


"நாம் எல்லாவற்றையும் அழிக்க வேண்டும், காலின்ஸ்!"
நெப்ராஸ்காவில் வெடிப்புக்குப் பின் பல ட்ரைவுகள் உடைந்து விட்டன. அவற்றை ஒரு வகையில் வகைப்படுத்துவது சிரமம். சரி, நாம் கடைசியாக வந்த பணிநெறிமுறையைப் பின்பற்றுவோம்!
"லெப்டினென்ட் அப்படின்னா... இன்னும் சிறிது நேரத்திலேயே இந்த கப்பல் கவிழ்ந்து விடுமா?"
நாம் இந்த இக்கட்டான சூழலில் இருந்து விடுபட்டவுடன், ஜீனிடம் சொல்லி முக்கிய கோப்புகளை அழிக்க வேண்டும்.
ஜீன், நம் போராட்டம் முடிந்தது. நாம் முன்னரே கிளம்பியிருக்க வேண்டும் என நீயும் உணர்ந்திருப்பாய்!
இந்த போராட்டம் தொடர்வதால் நாம் இன்னும் தோற்க்கவில் லை. ஏதேனும் ஒரு வழி நிச்சயம் இருக்கும் லெப்டினன்ட்!
நமக்கு இன்னும் ஒரு வாய்ப்பு இருக்கலாம்.
இல்லை, நான் உனக்கு ஒரு வாய்ப்பு கொடுத்தேன் ஜீன், ஆனால் நீ நேரத்தை வீணடித்து விட்டாய்! அதனால் இப்போது அனைவரும், என் திட்டத்தை பின்பற்றப் போகிறோம்!


"டாக்டர் நார்த், நீங்கள் என்ன கண்டுபிடித்தீர்கள் என காட்டுங்கள்."
"இந்த இடத்தில் என்ன இருக்கிறது?"
"இது தான் மற்ற பகுதிகளை விட உயரமானது. கீழிருந்து மேற்பரப்பு வரை 600 அடி இருக்கும்."
ஓ, டாக்டர் நார்த்! இப்போது உன் திட்டத்தை சமைக்க உதவுகிறாரா? ஆனால் அதன் மதிப்பு எப்படி இருக்குமென முன்பே சொல்லி இருக்கிறேன்."
"குகையின் இந்த பகுதியை அடையும் போதுதான் நெப்ராஸ்கா பழுதானது."
"இதன் குறுக்கு வெட்டு தோற்றத்தைப் பார்க்கும் போது, முதல் 100 அடி களிமண்ணாலும், அடுத்த 150 அடி சுண்ணாம்பினாலும், அதன் மேற்பகுதி மணலாலும் ஆனது தெரிகிறது."
இந்த நிலவியல் பாடத்தின் மூலம் நெப்ராஸ்காவை காக்க நினைக்கிறீர்களா?
"இந்த வழியில் சிந்திக்கலாம். அந்த மேற்பகுதி தான், வெளிப்பரப்பிற்கு செல்ல தடையாக உள்ளது. அங்கு ஒரு வெடிப்பை ஏற்படுத்தினால் பிரச்சினை முடிந்தது!"
"இதனை செய்ய ஒரு குறுக்குவழி உள்ளது. நாம் அதன் உச்சியில் ஒரு வெடிப்பை ஏற்படுத்தினால்... அனைத்தும் விரைவாக முடித்து விடும். அதன் பின் தடை ஏதும் இல்லை."
மிகச் சரி, என இல்லை. இதோ எங்கள் திட்டம்...
EXPLOSION
nt Percent Copper
இந்த சிறிய வெடிப்பு நெப்ராஸ்கா வில் என்ன மாற்றத்தை ஏற்படுத்தும்? வெடிப்பில் இருந்து விழும் குப்பைகள் தடையாகி விடாதா?
நிச்சயமாமாக கிடையாது!
34


இது பைத்தியக்காரத்தனமானது என எனக்குத் தெரியும். ஆனால் நெப்ராஸ்காவால் தாக்கு பிடித்து நிற்க முடியும். அதன் மேற்பரப்பு 40 அடி பனிபாறையைக் கூட உடைக்கும் சக்தி வாய்ந்தது. இது மணலால் ஆனது தான்!
ஆனால் இதை நாம் செய்ய, ரியாக்டர் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டுமே!
நீங்கள் சொல்வது சரி தான் லெப்டினென்ட். இந்த முழு குகையும் அதனால் உடையலாம். அல்லது நெப்ராஸ்காவின் மேற்பகுதியும், வெடிப்பு சற்று தவறினாலும் நொறுங்கி விடலாம்.
ஆனால்... இது சாத்தியம்!
"இது ரொம்ப ரிஸ்க், ஜீன்!"
நம் மொத்த குழுவையும் பாதுகாப்பாக பின் அறையில் தங்க வைத்தால், நெப்ராஸ்காவின் மேற்பகுதி நொறுங்கினாலும் நம்மால் தப்ப முடியும்.
சரி, வெடிமருந்தை எவ்வாறு குகையின் மேற்பகுதியில் பொருத்துவீர்கள்? நம்மால் அவ்வளவு தூரம் நீந்தி செல்ல முடியாதே!
நல்லது...நாம் DSRVஐ பயன்படுத்தலாம்.
இது பைத்தியக்காரத்தனமானது ஜீன். DSRVஐ பயன்படுத்தினால், நாம் செல்லும் அளவு எரிபொருள் போதாது.
நீங்கள் சொல்வது சரிதான். வெடிகுண்டு வைத்து விட்டால் DSRVஐ மீண்டும் நெப்ராஸ்காவில் கொண்டு வந்து வைத்து விட்டு காத்திருக்க வேண்டியது தான்.
ஜீன், நாம் தப்புவதற்கு இருக்கும் ஒரே வாய்ப்பையும், நீ தற்கொலை திட்டமாக மாற்றப் பார்க்கிறாய். நீ சொல்வது போல் நடக்க 100ல் 1 வாய்ப்பு தான் உள்ளது.
நீங்கள் மிகவும் எதிர்மறையாக இருக்கிறீர்கள் லெப்டினென்ட். குழுவில் உள்ளவர்களிடம் இதைக் கேட்டால், செய்து பார்க்கலாம் என்றே கூறுவர். பந்தயம் கட்டிக் கொள்வோமா?
அவர்களும் உங்களை பாராட்டுவார்களென்று, எனக்கு தோன்றவில்லை டாக்டர்.
சரி ஜீன்...உன் திட்டத்தை செயல்படுத்தி பார்த்து விடுவோம்!
சரி, நான் செரினோவிடம் dsrvஐ வெடிகுண்டு எடுத்து போகும் வகையில் அட்ஜஸ்ட் செய்ய சொல்கிறேன்.
அடுத்து, நாம் கமாண்டரை தொடர்பு கொண்டு...கருவறையில் என்ன நடக்கிறது என பார்த்து, அவர்களுக்கும் பச்சை விளக்கு காட்டிடுவோம்.
"அதே நேரத்தில் உங்கள் வீடியோ கேம் திட்டத்தையும், குழுவிடம் விளக்கிச் சொல்வோம்."


ஜூன் 27,மதியம் 3.40
"இதுதான் டாக்டர் சொன்ன திட்டம் கமாண்டர்..."
"என்ன யோசிக்கிறீர்கள் கமாண்டர்?"
இது சுத்த பைத் தியக்காரதனமானது ஜீன். ஆனால் இது தான் கடைசி வாய்ப்பு.
ஜேம்ஸன் குழு டைட்டானியத்தால் கப்பலின் மேல் பகுதியை வலுபடுத்துகிறது. A.B.S மூலம் திட்டத்தை செயல்படுத்தி விட்டால், குழுவின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் ஆகிவிடும்.
"அனைவரும் அறை 3 மற்றும் 6 க்கு செல்லவும். மற்றவை வெடிப்பினால் சேதம் அடைந்துள்ளன."
உங்கள் பகுதியின் முடிவான செய்தி என்ன கமாண்டர்?
"நாங்கள் ஆல்பா டீமை நெருங்கி விட்டோம் என்பது நல்ல செய்தி."
கெட்ட செய்தி, நாங்கள் மொசாக்கோவை இழந்து விட்டோம். இங்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது என சிறு தடயம் கூட கிடைக்கவில்லை.
நான் வேறு ஒன்றை யோசிக்கிறேன் கமாண்டர்.
என்ன யோசனை உபாசாக்கி?ஏன் அப்படி நின்று பார்கிறாய்? வா... கடவுளை தரிசிக்க முன்னேறுவோம்!
நாம் அனைவரும் நேரத்தால் அழுத்தப்பட்டுக் கொண்டு இருக்கிறோம் என தெரியும். ஆனால் நாம் நினைத்து வந்ததற்கும் இங்கு உள்ளவற்றையும் பார்த்தால் நாம் எதை கவனிக்க தவறிவிட்டோம் என யோசித்துக்கொண்டிருகிறேன் கமாண்டர்!
நீ என்னதான் யோசித்தாய்?
நான் என்ன அர்த்தத்தில் சொல் கிறேன் என்றால்... யுட்ரிக்ஸ் அமைதியை விரும்புபவர்கள், யாருக்கும் தீங்கு நினைக்காதவர்கள் என ஜீன் கூறினான். பின் ஏன் இவ்வளவு பெரிய கோட்டையைக் கட்டினர்? இது கடவுளை துதித்து வணங்குவதற்காக எனில், பிரச்சனை வரும் போது, ஆடு அல்லது மாட்டை பலி கொடுத்திருக்கலாமே! பிரச்சினை முடிந்திருக்கும் அல்லவா?
"உன்னுடைய கோட்பாடு என்ன உபசாக்கி?"
"அவர்கள் கோட்பாடு பற்றி எனக்கு என்ன தெரியும்...ஆனால் இந்த கோவில் வழிபடுவதற்காக இல்லாமல்,வேறு யாருக்காகவாவது கட்டப்-பட்டிருந்தால், ஒருவேளை அவர்கள் வேறு ஏதாவதால் அச்சுறுத் தப்பட்டிருந்தால்?"


ஆமாம்...உபாசாக்கி, இங்கு உள்ளூர் பழங்குடியினர் வழிபட்ட தெய்வங்கள் எதுவும் இருப்பதாக தெரியவில்லை.
சரி டிஸ்பிரஸ், இது தத்துவம் பேசுவதற்கான நேரம் அல்ல. விரைவாக செயல்பட வேண்டும். நேரத்தை வீணாக்க முடியாது.
நீங்கள் சொல்வதும் சரிதான்...
காப்! இங்கு என்ன நடந்திருக்கலாம் என்பது பற்றியே குறிப்பிட்டேன். அதை நீங்கள் எளிதாக எடுத்துக் கொண்டால் நான்...
சரி, உபசாக்கி! நகர்ந்து கொண்டே இருப்போம்...
அது இன்னும் இருக்கிறது. என்னால் உணர முடிகிறது...
என்னால் கேட்க முடிகிறது.
நான் என் ஆத்மாவை நம்புகிறேன்!
நான் மிகவும் தாகமாக இருக்கிறேன்...


"...உங்கள் ஒளி..."
"...நித்தியமானது."
டிஸ்பிரஸ்?
அவன் என்ன செய்கிறான்?
கடவுளே, என்னை காப்பாற்று...
கிரா-க்!
ஆஆஆஅஆஆ!
என்ன இது...?


செத்தொழி!
டுமீல்! டுமீல்! டுமீல்!
நாம் அதை முடித்து விட்டோம்!
“...டிஸ்பிரஸ் என்ன ஆனான்? அந்த சாத்தான் எங்கே?”
இல் லை...
அது முடியவில் லை.
அதனால் போயிருக்க முடியாதே...


அவர்கள் முடிவில்
சென்ற இடம்!


"முடிந்தது லெப்டினென்ட்! ஜீன் திட்டத்தை குழுவின் முன் கோடிட்டு காட்டினான். குழுவினரும் ஏதாவது செய்கிறோமே என எண்ணி மகிழ்ச்சி கொண்டனர்."
FIRE CONTRO
CDT HAMISH
"இப்போது வெடிப்பினை செயல்படுத்த கையொப்பமிடுங்கள்!"
அவர்கள் என் கைகளைக் கட்டாயப்படுத்தி விட்டனர், காலின்ஸ். என் திட்டத்தை அறிந்து கலகம் செய்கின்றனர். இருப்பினும் நாம் நேவியில் இருக்கின்றோம். பிரபலம் ஆவதைப் பற்றி சிந்திக்க கூடாது.
கையொப்பம் இடுகிறீர்களா, லெப்டினென்ட்?
நான் இன்று கப்பலின் பதிவில் என்ன எழுத வேண்டும், உங்களுக்கு ஏதேனும் ஐடியா உள்ளதா?
"மேஜர் ஜீன் முன்மொழிவை குழு ஏற்றுக் கொண்டதால், நாங்கள் இந்த தற்கொலை திட்டத்தை செயல்படுத்த இருக்கிறோம்."
SHIP'S LOG
"...குழுவை இவ்வாறு பயனற்ற வகையில் அழித்துக் கொண்டால், பின் ஒரு நாளில் அதுவும் உலகின் ஒரு நூற்றாண்டுக்கான சிறந்த கண்டுபிடிப்பாக மாறலாம்."
என்ன சொல்ல வருகிறீர்கள் என புரியவில்லை லெப்டினென்ட் .
விடை எளிது...தேவையே ஒரு விஷயத்தை மதிப்பு மிக்கதாக ஆக்குகிறது. நாம் குதிரையை இழந்தால், போர்களத்தை இழப்போம். போர்களத்தை இழந்தால், அரசை இழப்போம். நாம் இந்த கப்பலை இழந்தால், இந்த கண்டுபிடிப்புக்கான புகழையும் இழப்போம்!
"புகழ் எனில் வரலாற்று புத்தகங்களில் உங்கள் பெயர் வர வேண்டும். என்னை நம்பு! இந்த கண்டுபிடிப்பு வெடி சத்தத்தை விட சிறந்தது. நாம் மேற்கொள்ளும் பணியை விட சிறந்தது. யுத்தத்தை விட சிறந்தது. நம் மனிதர்களை விட சிறந்தது!"
அப்படியா...
நான் 'வெற்றி தான் நேவியின் ஒரே புகழ்' என எண்ணினேன்.
"நாஜிகள் பைத்தியங்கள் தான். ஆனால் அதைப் பற்றி கொஞ்சமாவது புரிந்து வைத்துள்ளனர்!"
இது ஜெர்மன் புத்தகம், நாஜிகளுடையது அல்ல. சரியாக சொல்ல வேண்டுமானால், அந்த மூழ்கிய நீர்மூழ்கி கப்பலில் இருந்து எடுக்கப்பட்டு ஜீனால் தொகுக்கப்பட்டது. இதனை எழுதியவர் ஜெர்மன் அகல் வாராய்ச்சியாளர். அவர் இதில் யுக்ரிட்ஸ் இருந்ததற்கான சாத்தியம் பற்றி குறிப்பிடுகிறார்...
யுக்ரிட்டின் கட்டிடக்கலை & தொல்லியல் பற்றிய ஆய்வு!
...அதை நாம் கண்டு பிடித் திருக்கிறோம் காலின்ஸ்...
CRACK!
"...ஆனால் நாம் இப்போது அனைத்தையும் புதைக்கப் போகிறோம்..."


ஜூன் 27,மாலை 4.43
"அதிகாரிகள் கட்டாயத்தால் என் வழக்கமான செயல் முறையை கைவிட கட்டாயப் படுத்தப் பட்டேன்."
Ship's log
நான் அதிகாரிகளின் கட்டாயத்தால், என் வழக்கமான செயல்முறையை கைவிட்டேன். இதன் முடிவு எங்கள் குழுவைக் காப்பாற்றும் படலம், கமாண்டரின் வருகையுடன் இணைக்கப்பட்டது. இந்த ஒருதலை பட்சமான முடிவினை மீதமிருந்த சில அதிகாரிகளே எடுத்தனர்.
ஸ்ஸ்ஸ்...
தலைப்பு செய்தி: செனட்டரின் மகனான லியனார்டு கோவாக்ஸ் வேலியில் விளையாடிய போது தவறி விழுந்து மரணம் அடைந்தான்.
என்ன?!
தன் தைரியத்தையும்,வீரத்தையும் காட்ட கம்பி வேலியில் ஸாகசம் செய்து காட்டிய போது இந்த சோகம் நிகழ்ந்தது.சம்பவத்தை பார்த்த செனட்டரின் இளைய மகன் கூறியது...
CANAL 37
Gale Weathers
"என் மூத்த சகோதரர், தனக்கென ரசிகர்களை ஏற்படுத்த செய்த முயற்சி, சோகத்தில் முடிந்தது."
CANAL 37
Gale Weathers
விசாரணை சென்று கொண்டிருக்கிறது. நாம் குறைந்த பட்ச சீர்திருத்தங்களையாவது ஏற்படுத்த வேண்டும். செனட்டர் தன் மகனின் செயலுக்கு பொறுப்பு ஏற்கவே விரும்பினார். இருப்பினும் அவர் தண்டனைக்கு உரியவர் அல்ல.
CANAL 37
Gale Weathers
என் மூத்த சகோதரரிடம்... 'லியோ...இதை செய்யாதே' என கூறினேன்... கடவுளே! நான் கூறினேன். நான் கூறினேன்!
வேலியை தாண்டும்போது தவறினால் அது உயிரை குடித்துவிடும் என நினைத்தேன்... லியோ பொறுப்புடன்...
பொறுப்புடன் நடந்து கொள்... பொறுப்புடன் நடந்து கொள்... பொறுப்புடன்...ஷ்ஷ்ஷ்...
ஷ்ஷ்ஷ்...பொறுப்புடன் நடந்துகொள்... பொறுப்புடன்.
"இல்ல்லை!"
CANAL 37
Gale Weathers


எப்படி பார்த்தாலும் தப்ப வாய்ப்பேயி ல்லையே..ம்..!
அது எப்படி இங்கிருந்து தப்பியது?


அது எங்கு ஒழிந்திருந்தாலும் நம்மிடமிருந்து அதனால் எளிதாக தப்ப முடியாது!
பைத்தியமா? அதை மறந்து விடுங்கள்! அது என்னவென்றே தெரியவில்லை. ஆனால் ஆல்பா டீம் மற்றும் நம் ஆயுதங்களிடமிருந்து எளிதாக தப்பி சென்றிருக்கிறது. இங்கு யாருமே இல்லை. நாம் ஒன்றும் போராளிகளோ அல்லது யுக்ரிட்டின் விருந்தாளிகளோ அல்ல. ஆனால் பல நூற்றாண்டுகளாக...
அது பிழைத் திருக்கிறது!
இன்னும் உயிருடனும், தோற்றத்துடனும் வாழ்கிறது.
உன்னுடைய அனுமானம் அற்புதமாக இருக்கிறது! ஆனால் ஏதோ ஒரு விஷயம் நம்மையும் உயிருடன் வைத்திருக்கிறது!
உன் நம்பிக்கை தவறானது காப்... டிஸ்பிரஸ், மொசாக்கோ, ஸ்டீல்வுட்டுக்கு என்ன நடந்தது? நாம் உடனடியாக வெளியேறாவிட்டால் நமக்கும் அதுதான் கதி! அது மனிதனல்ல சாத்தான் என்பதை மறந்துவிடாதே!
எனக்கும் நீ சொல் வது சரியென்றே படுகிறது உபசாக்கி!
இங்கு என்ன நடந்திருக்கிறது என தெரியாமலே மடியக்கூடாது. நாம் தாக்கப்பட்டுள்ளோம்! காயமடைந்துள்ளோம்! களைப்பாக உள்ளோம்! ஆனால் ஆல்பா டீம் இந்த பிளவு வழியே தான் சென்றுள்ளது.
"...அதனால் நாம் நம் ஆட்களுடன் தான் வெளியே செல்ல வேண்டும்."
கயிறு வலுவாகவே உள்ளது. உங்கள் பக்கம் உறுதிப்படுத்தி விட்டு நீங்களும் வந்தது விடலாம் கமாண்டர்!
லெப்டினெண்ட்? நான் என்ஜினியர்களிடம் பேசி விட்டேன். 7 ல் இருந்து 10 நிமிடத் திற்கு ரியாக்டர்களால் சக்தி வழங்க முடியும், என்று கூறுகின்றனர். மேலும் கப்பலின் மேற்புறத்தை வலுப்படுத்தவும் அவர்களிடம் சில ஐடியாக்கள் உள்ளன.
KOWAKS
நான் சொல்வது கேட்கிறதா?
கோவாக்ஸ்?
ஓ, நோ...


"...DSRV"
சோம்பேறிகளா...சீக்கிரம் முடியுங்கள்!
"அவன் நம் மரண ஆணைக்கு கையொப்பம் இட்டது போல தெரிகிறது."
"அவன் DSRV உடன் வெளியேறிவிட்டால், நம் தப்பிக்கும் திட்டத் திற்கு குட்பை சொல்லி விட வேண்டியது தான்!"
டேவிஸ், கோவாக்ஸ் தன்னை ஏர்லாக்கில் வைத்து பூட்டிக் கொண்டாரா?
உனக்கு எப்படி தெரியும்?
அவன் செரினோவை வீழ்த்தி விட்டான். பின் கதவை சாத்தி விட்டு DSRV ஐ செலுத்த முயற்சித்தான். இப்போது என்ன செய்து வைத்திருக்கிறான்?
ஜீன், அவன் தப்பி ஓடும் முன் நம்மால் கதவைத் திறக்க முடியும்.
இந்த விஷயத்தில் பதில் கள் தெளிவாகவே உள்ளன.
"ஏர் லாக்கிற்கு இரண்டு திறப்புகள் உள்ளன. அதில் கோவாக்ஸ், ஒன்றை பயன்படுத்தி பூட்டினால்...."
...நாம் அடுத்ததை பயன்படுத்தலாம்.
3000 அடி ஆழத்தின் அழுத்தம் தாங்கும் நீச்சல் உடையை இரண்டு டைம் ஏற்கனவே பயன்படுத்தி விட்டதால் இங்கு ஒன்று மட்டுமே மீதம் உள்ளன. சாதாரண நீச்சல் உடையில் சில நிமிடங்கள், சில மீட்டர் மட்டுமே இந்த ஆழத் தில் தாக்கு பிடிக்க முடியும்.ஆக்ஸிஜன் அளவு வேறு குறைவாக உள்ளது மேஜர்...
உள்ளதை வைத்து ஒரு முயற்சி செய்துப் பார் கிறேன் டேவிஸ்!
நம்மால் DSRV ஐ மீட்க முடியாவிட்டால், எப்படியும் இறந்து விடுவோம்! நான் முயற்சித்து சாகிறேனே!
ஓகே மேஜர்... நாங்களும் வருகிறோம்!


"நாமும், அதை அடையச் செல்லலாம்."
நைஜில், நாங்கள் வந்ததும் இரண்டுக்கும் இடையேயான கதவை அடைத்து விடு. நானும், டேவிஸ்ஸும் கோவாக்ஸைப் பார்த்துக் கொள்கிறோம்.
நாங்கள் அருகில் சென்று விட்டோம். கிட்ட த்தட்ட நெருங்கி விட்டோம்!
அங்கே கவனி!
DSRV வேகத்திற்கு நாம்மால் நீந்த முடியாது....மேஜர் ஜீன் அதை பற்றிக்கொண்டு விட்டாரா..?
"DSRVஐ பற்றிக்கொண்டேன்..."
"உடனே நிறுத்து, கோவாக்ஸ்!"
என் வழியை விட்டு விலகு!
"நான் அப்போதே கூறியதை நீ கேட்கவில்லை! இப்போது ரொம்ப தாமதமாகிவிட்டது. உன்னுடைய தவறுக்கு நான் தண்டனை அடைய முடியாது!"
மீண்டும் DSRV ஐ ஏர்லாக்கில் வைத்து விடு!
"முடியாது!"
ஜீன்! DSRVஆக்ஸிஜன் டியூபை வெட்டி விடு. அது தான் நமக்கான ஒரே வாய்ப்பு!
அது ரொம்ப ரிஸ்க்! அவன் DSRVஐ செயலிழக்கச் செய்து விடலாம் !


"நீ இறந்து விடுவாய்! நான் சொல்வது கேட்கிறதா கோவாக்ஸ்?"
"நீங்கள் தான் சாகப் போகிறீர்கள்!"
அட, கடவுளே!
ஜீன், அவன் அதை அழுத்தப் போகிறான்!
"கோவாக்ஸ், வேண்டாம்!"
ஆக்ஸிஜன் டியூபை பிடிங்கி விட்டேன்...
செத்து, தொலை!
நோ! ஆக்ஸிஜன் டியூபை வெட்டாதே!
"க்கில்ல்ப்..."
BRAF!!!



ஒருவழியாக கயிற்றில் பள்ளத்தாக்கை கடந்து நாம் வந்து விட்டோம். இனி நிம்மதியாக மூச்சு விடலாம். அடுத்து என்ன கமாண்டர்?
நம் விளக்குகள் வெளிச்சம் போதவில்லை. இந்த அறை பெரியது. இந்த அறை முழுவதும் தேட பெரிய விளக்கு வேண்டும்.
காப்?
ஒகே கமாண்டர்!
FSHHH
"நம்முடைய பூமிக்கு அடியிலான பயணம் எப்படி முடிந்திருக்கிறது என பார்க்கலாம்."


"இதன் தோற்றத்தை மட்டும் கவனியுங்கள்..."
"கடவுளே! இவைகளில் இந்த ஒன்று மட்டும் நம் பூமியை சேர்ந்தவை அல்ல காப்.."


“...இது நரகம்!”


ஆல்பா டீம், இங்கு இன்னும் பிழைத் திருப்பார்கள் என நம்புகிறாயா?
ச்சே...என் பேச்சு எனக்கே எதிரொலித்து நடுங்கவைக்கிறது, முதலில் இந்த நரகதுளையில் இருந்து வெளியேறுவோம் வாருங்கள்!
கமாண்டர்,, இது என்ன இடம்?
இல்லை. சரி வெளியில் இருப்பவர்கள் என்ன சொல்கிறார்கள் என கேட்போம்.
**பின்ச்சர்!, ஜிம்மர் !மெக்கன்சி!** எங்கே இருக்கிறீர் கள்? நான் பேசுவது கேட்கிறதா?
இது தான் பலியிடுவதற்கான இடமாக இருக்கலாம், அல்லது போருக்கான எந்த அறிகுறியும் இல்லாமல், ஒரு நாகரீகம் ஒரே இரவில் மறைந்தது என ஜீன் கூறினான் அல்லவா...
...யுக்ரிட்ஸ்.
அவர்கள் அனைவரும் இங்கிருக்கிறார்கள், காப்!
அது அனைவரையும் கொடூரமாக கொன்று போட்டுள்ளது!.


அது அவர்களை கொன்றதாக நான் நினைக்கவில்லை.
அப்படியேன்றால் வேறு யார் இந்த செயலை செய்திருப்பார்?
"அந்த சமாதிகளுக்கு பின்னால் சில வகையான இயந்திரங்கள் இருக்க வேண்டும்..."
"அந்த மார்புப் பகுதியை கவனியுங்கள்..."
"அது சடங்குகளின் போது அணியும் நெக்லஸ்."
அது யுக்ரிட்ஸ்களை கொல்லவில்லை. இங்கே அவர்கள் சொந்த விருப்பத்தின் படியே வந்திருக்கிறார்கள். அவர்கள் இந்த இடத்தை கட்டி, விழாவும் நடத்தியுள்ளனர்.
"பின் அவர்கள் தாங்களே தற்கொலை செய்து கொண்டனர். கடைசி மனிதன் வரை."
என்ன அவர்கள் இந்த கருவறையை உருவாக்கி, தாங்களே வந்து தற்கொலை செய்து கொண்டனரா? ஏன்?
கமாண்டர், ஆல்பா டீம் சிக்னல் மேலேயிருந்து வருவதை கவனித்தீர்களா..?
"யுட்ரிக்ஸ்கள் கோணத்தில் மரணம் ஒரு தண்டனை அல்ல..."
"...அது விடுதலை!"
"கடவுளே! சிக்னல் 100 மீ உயரத்தில் இருந்து வருகிறது... அவ்வளவு உயரத்திற்கு எப்படி போனார்கள்? அங்கு என்ன நிலையில் கிடகிறார்களோ..?!"


ஆஆ...நான் இன்னும் உயிரோடுதான் இருக்கிறேனா..?!
கண்ணாடி விரிசல் விட்டாலும் உடையவில்லை...
ஓ..நோ... DSRV பள்ளத்தில் விழுந்து கவிந்து கிடக்கிறதே!
சின்ன அதிஷ்டம், இது மெதுவாக இறங்குகிறது. மற்றபடி எல்லாம் நன்றாகவே உள்ளது...
O2
இந்த நீந்தமுடியாத உடையின் பாரத்தால் நான் மேலே சென்று கப்பலை அடையவும் வழியில்லை. எல்லாம் முடிந்து விட்டது... இனி நான் செய்வதற்கு ஒன்றுமில்லை.
"உண்டு...ஜீன்..!"




ஜீன் விழித்துக் கொண்டானா..?
ஆல்பா டீம்மை மீட்பு குழு கண்டுபிடித்தார்களா..?

**பரபரப்பான பதில்கள் இறுதி பாகத்தில்...**

# கடைசி பக்கம்

வாசக நண்பர்களே வணக்கங்கள்!

ஒரு புதிய சூப்பர் பவர் ஹீரோவின் கதை...கதாப்பாத்திரம் உருவாக்கப்படும் போது அதன் உருவத்தை விட அதன் சக்தி என்னவென்ற பட்டியலை பொறுத்தே அதன் வெற்றி இன்று தீர்மானிக்கப்படுகிறது. இது நாயகனுக்கும் வில்லனுக்கும் மட்டும்
அல்ல...

திகில், த்ரில்லர் படங்களில் வரும் பேய்,பிசாசுகளுக்கும் பொருந்தும்! பேய் என்றால் ரத்தம் குடிக்கும், அந்தரத்தில் தூக்கி அடிக்கும், கண்ணாடியில் நாம் பார்த்தால் தெரியும், அது தன்னை கண்ணாடியில் பார்த்தால் அலறியடித்து தெறித்து ஓடும். சிலுவை,பைபிள், புனித நீர் என்றால் அதற்கு அலர்ஜி என ஆரம்ப கால எழுத்தாளர்கள் கூட எழுத முயற்சிப்பதில்லை எனும்போது...தடம் பதித்த எழுத்தாளர்களின் கற்பனை கண்டுபிடிப்பு ரொம்பவே நுட்பமாக ஒன்றுக்கொன்று மிஞ்சும்வகையில் வடிவமைகிறார்கள்!

இப்போதைய கற்பனை துறையின் மிகப்பெரிய சவால் கதை அல்ல.அந்த கதையில் வரும் கதாப்பாத்திரத்தின் சக்திகள் ‘சபாஷ்’ போடும் படி அசத்தலாக அமைப்பது தான். அந்த வகையில் இந்த ஆழ்கடலுக்குள் உள்ள சாத்தானின் சக்தியை மிக அருமையாக கதாசிரியர் உருவாக்கியிருக்கிறார்.

ஒரு சாம்ராஜ்ஜியத்தையே வேரோடு சாய்க்கும் வல்லமையாகட்டும்....அதனை கட்டுப்படுத்தி வைத்திருக்கும் யுட்ரிக்ஸ்களின் வழிமுறை ஆகட்டும் ஏட்டிக்கு போட்டிதான். இந்த மூன்று பாக கதையை ஒரு ஆர்வத்தில், கதைகளத்தில் மயங்கி மொழிமாற்றம் செய்து முடித்துவிட்டாலும்...அதன் முடிவையும், அதில் வரும் அமானுஷ்ய சக்தியை படங்களின் வழியே புரிந்துக் கொள்ள முடியாமல் ’அடச்சே...செமத்தியா சிக்கிட்டோம்...இதை கிடப்பில் போட்டுவதை தவிர வேறு வழியில்லை..’ என கைவிட்டுவிட்டோம்.

’இவ்வளவு உழைத்து கடைசியில் இப்படி ஆச்சே...இதே உணர்வு படைப்பாளிகளுக்கும் வந்திருக்காதா..? முடிவு புரியாத கதைக்காகவா மூன்று பாகம் மெனக்கெட்டு அவர்கள் உழைத்திருப்பார்கள்..? எங்கோ நம் புரிதலில் தான் தவறு இருக்கிறது..’ என ஒரு நண்பர் மட்டும் விடாப்பிடியாக அதை திரும்ப திரும்ப பிரெஞ்சு மற்றும் ஆங்கில மொழிகளின் வசனங்களையும், படங்களின் வழியே உணர்த்தப்பட்டிருக்கும் விவரங்களையும் ஆராய்ந்து பல விவாதங்களுக்கு பின் முடிவில் ஒரு அருமையான புரிதலுக்கு எங்களை அழைத்துச் சென்றார்.

உண்மையில் இந்த படைப்பு எங்கள் குழுவிற்கு பொருத்த மட்டிலும் மிக சவாலான ஒன்று மட்டுமல்ல...நிறைவாக செய்துள்ளோம் என்ற திருப்தியை தந்த ஒன்றும் கூட..!

ஒரே ஒரு சங்கடம் என்னவென்றால்... மூன்று பாகம் என்பதால் இதை மூன்று மாதம் இழுத்துக்கொண்டு செல்ல வேண்டியதாகி விட்டது. ஒருமாதம் 60 பக்கங்கள் தாண்டி உருவாக்கும் வாய்ப்பும் சந்தர்ப்பமும் எங்களின் நேர ஒதுக்கீட்டில் அமையவில்லை என்பதை மட்டும் வாசக நண்பர்கள் புரிந்து கொள்ள வேண்டுகிறோம். பரபரப்பான பக்கங்ளுடன் அடுத்த படைப்பில் சந்திப்போம்.!

காமிக்ஸ் வாசிப்பே அந்த துறையின் அத்தனையும் வளர்க்கும்!

நெஞ்சமெல்லாம் காமிக்ஸ் காதலுடன்,


இந்த மாத தமிழ்
காமிக்ஸ் புத்தகங்கள்..!

செப்டம்பர் மாத இதழ்கள் இப்போது விற்பனையில்..!




நமது ஆன்லைன் விற்பனைத் தளங்கள்!

www.lioncomics.in

www.lion-muthucomics.com